# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1922/49 - 2015 ජූලි මස 10 වැනි සිකුරාදා - 2015.07.10

*1922/49 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1912 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பொது தணிக்கை சபை சட்டம்***

*1969 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1912 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பொது தணிக்கை சட்டத்தின் 3 ஆவது மற்றும் 6(10) ஆவது பிரிவுகளுக்கமைய கலாசார அலுவல்கள் அமைச்சரினால் மேற்கொள்ளப்படும் ஒழுங்கு விதிகள்.*

*ரணில் விக்கிரமசிங்க,*
*கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள்,*
*சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.*

*கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள்,*
*சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,*
*கொழும்பு,*
*2015, யூலை 06.*

**ஒழுங்கு விதிகள்**

*1.* *இந்த ஒழுங்கு விதிகள் "தணிக்கை சபை சட்டத்தின் அனுமதிப் பத்திரங்களுக்கான கட்டணத்தை அறவிடும் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள்" என அறிமுகப்படுத்தப்படுவதுடன் அது 2005, யூலை 15 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படும் 2009, யூன் மாதம் 15 ஆந் திகதிய 1606/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள் இதனால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*2.* *இலங்கையினுள் தணிக்கை சபை சட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு காட்சிப்படுத்துவதற்காக சட்ட ரீதியான அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் சகல நபர்களும் /நிறுவனமும் அந்த விண்ணபத்துடன் கீழ் குறிப்பிடப்படும் அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் :-*

*(அ)* *திரைப்படங்கள்*

| | | | |
|---|---|---|---|
| (i) | *வெளிநாட்டுத் திரைப்படத்திற்கு (முன் விளம்பர நாடா உட்பட)* | *ரூபா* | *20,000.00* |
| (ii) | *உள்நாட்டுத் திரைப்படத்திற்கு (முன் விளம்பர நாடா உட்பட)* | *ரூபா* | *10,000.00* |
| (iii) | *முன் விளம்பர நாடாவை மாத்திரம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில்* | *ரூபா* | *1,000.00* |
| (iv) | *வரையறுக்கப்பட்ட காட்சிகளுக்கான டீவீஉ/புளூரே திரைப்படங்களுக்கு* | *ரூபா* | *1,000.00* |

(அ.1) உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை சபையிடம் ஒப்படைத்து 5 வேலை நாட்களுக்குள் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதுடன் உடனடித் தேவைகளின் அடிப்படையில் குறுகிய காலப் பகுதிக்குள் அனுமதிப் பத்திரம் தேவைப்படின் கீழ் குறிப்பிடப்படும் வகையில் மேலதி கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(i) 24 மணித்தியாலங்களுக்குள் பெற்றுக்கொள்வதற்கு உரிய கட்டணத்தின் 50% த்தினை மேலதிகமாகச்செலுத்துதல் ;

(ii) ஒரு நாள் சேவைக்காக உரிய கட்டணத்தின் 100% ஐ மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். (ஒரு நாள் சேவைக்காக வேலை நாட்களில் முற்பகல் 9.30 மணிக்கு முன்னர் விண்ணப்பத்தை ஒப்படைத்தல் வேண்டும்).

(iii) தணிக்கை சபையின் திரைக்கூடத்தில் திரையிடும் வசதிகள் இல்லாத சந்தர்ப்பங்களின்போது குறிப்பிட்ட தினங்களுக்கு ஏற்ற வகையில் சபைக்காக திரையிடும் பொறுப்பை விண்ணப்பதாரி ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

(iv) 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் சபைக்கு அறிவித்தல் விடுப்பதன் மூலம் திரையிடுவதற்குத் தீமானிக்கப்பட்ட திகதியை மாற்றிக் கொள்வதற்கு விண்ணப்பதாரியினால் முடியும். ஆனாலும், அதனை விடவும் குறைந்த காலப்பகுதிக்குள் அல்லது முதலில் மேற்கொண்ட மாற்றத்தின் பின்னர் மாற்றமொன்றை மேற்கொள்வதாயின் அவ்வாறு மாற்றம் செய்து கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் மேலதிகக் கட்டணமாக ரூபா 5,000.00 செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) மேடை நாடகங்கள் :

| | | | |
|---|---|---|---|
| (i) | நீண்ட மேடை நாடகமொன்றுக்கு | ரூபா | 1,000.00 |
| (ii) | குறுகிய மேடைநாடகமொன்றுக்கு | ரூபா | 500.00 |

(ஆ.1) மேடைநாடகப் பிரதிகளின் அனுமதிக்கான விண்ணப்பங்களை பொது மக்கள் காட்சிக்கு 21 தினங்களுக்கு முன்னர் சபையிடம் ஒப்படைத்தல் வேண்டும். அதற்குப் பின்னர் ஒப்படைக்கும் நாடகப் பிரதிகளுக்காக உரிய கட்டணத்தின் 100% மான மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

(இ) இசை மற்றும் நடனக் காட்சிகள் :

| | | | |
|---|---|---|---|
| (i) | உள்நாட்டுக் கலைஞர்கள் பங்கேற்கும் திறந்தவெளிக் காட்சிக்கு | ரூபா - | 2,500.00 |
| (ii) | உள்நாட்டுக் கலைஞர்கள் பங்கேற்கும் உள்ளரங்க காட்சிக்கு | ரூபா - | 2,000.00 |
| (iii) | வெளிநாட்டுக் கலைஞர்கள் பங்கேற்கும் திறந்தவெளிக் காட்சிக்கு | ரூபா - | 25,000.00 |
| (iv) | வெளிநாட்டுக் கலைஞர்கள் பங்கேற்கும் உள்ளரங்க காட்சிக்கு | ரூபா - | 15,000.00 |
| (v) | தொலைக்காட்சி ஊடகத்தினால் நேரடியாக ஏற்பாடு செய்யப்படும் இசை மற்றும் நடனக் காட்சிக்கு | ரூபா - | 25,000.00 |

(இ.1) இசை மற்றும் நடனக் காட்சிக்காக விண்ணப்பத்தை பொதுமக்கள் காட்சிக்கு 10 தினங்களுக்கு முன்னர் சபையிடம் ஒப்படைத்தல் வேண்டும். அதன் பின்னர் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களுக்குரிய கட்டணத்தின் 25% மான மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

3. ஏதேனும் சமூக, கல்வி, கலாசார மற்றும் சமய ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்த எந்த வகையிலான காட்சிக்குமான அனுமதிப் பத்திரங்கள், சபையின் தற்றுணிபின் பிரகாரம் குறிப்பிட்ட கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படலாம். கட்டணத்தில் இருந்து விலக்களிப்புச் செய்வதற்கான வேண்டுகோள்களை பொது மக்கள் காட்சியை நடாத்துவதற்கு 14 தினங்களுக்கு முன்னர் எழுத்து மூலமாக சபையிடம் முன்வைத்தல் வேண்டும்.

4. காணாமல் போன அனுமதிப் பத்திரத்திற்காக பிறிதொரு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையாயின் அதற்கான கட்டணமாக ரூபா 1,000.00 செலுத்துதல் வேண்டும்.

7-1228

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.